மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.10/2012

2024–ம் ஆண்டு மார்ச் திங்கள் 03–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஹென்றி (PW1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.03.06.2024</u>
<u>வா.சா.1</u>
**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

நான் வழக்கு தாக்கல் செய்யும் காலத்திலேயே பிரதிவாதிகள் தாவா சொத்தில் வீடுகட்டி குடியிருந்து வந்தார்கள் என்றால் பட்டா மாற்றி கொண்டதால் குடியிருந்து வருகிறார்கள். நான் கிரையம் பெற்ற சொத்தானது தாவா மொத்த சொத்திற்கு ஆக தெற்கு பக்கம் என்றால் சரியல்ல வடக்கு பக்கம். தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் கிழமேல் பாதை உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் கிரையம் பெற்ற அனைத்து கிரையப்பத்திரங்களிலும் வடக்கு பக்கம் கிழமேல் பாதை இருப்பதாக காட்டி தான் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் வழக்குரையில் சொத்து விபரத்தை தெளிவற்ற முறையில் சொல்லியதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் குடியிருந்து வரும் நிலையில் வழக்கிற்காக நான் 01.03.2012 ம் தேதி 3 ம் பிரதிவாதி தலைமையில் மற்ற பிரதிவாதிகள் சேர்ந்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் நான் வழக்குரையில் சொல்லியுள்ள வழக்கு மூலம் தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதிகள் கிரையம் வாங்கி அனுபவம் செய்து வரும் நிலையில் ஆக்கிரமிக்க அவசியமில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அவரவர் கிரையம் வாங்கிய சொத்தை பொறுத்து வட்டாட்சியரிடம் முறையாக பட்டா மாறுதல் பெற்று, தங்கச்சிமடம் பஞ்சாயத்தில் வீட்டு வரி ரசீது பெற்று இன்றுவரை அனுபவம் செய்து

வருகிறார்கள் என்றால சரியல்ல. பொய்யான காரணங்களை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்